**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 56/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-5/PW-11 | Village: | |
| Name | : மூர்த்தி | Age | : 45 |
| Father's/Husband's Name | : கணேசன் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 04/08/2023**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய காவலர் திருமதி.கவிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**முதல் விசாரணை**

நான் திப்புராஜபுரத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 15/10/2019 ம் தேதி மதியம் 11.00 மணியளவில் எனது வீட்டில் இருந்து 2 கி.மீ தூரத்தில் உள்ள காலவாயில் கல்அறுத்து கொண்டிருந்தேன். அப்போது மகளிர் போலிசார் பவுன்ராஜ் வீட்டிற்கு வந்திருந்தார்கள். சசிகலா கொடுத்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள். விசாரித்து அந்த இடத்தை பார்வையிட்டார்கள். அதற்கு சாட்சியாக என்னிடம் கையொப்பம் வாங்கி கொண்டார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**பார்வை மகசரில் உள்ள முதலாவது**

**சாட்சி கையொப்பம் மட்டும் அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கு பற்றி விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் நான் அந்த வழியாக சென்றபோது என்னை கூப்பிட்டு கேட்டார்கள். போலிசார் என்னிடம் வெறும் பேப்பரில் கையொப்பம் வாங்கினார்களா என்றால் கையொப்பம் வாங்கினார்கள். வெறும் பேப்பரா என்று ஞாபகமில்லை. போலிசார் என்னிடம் எங்கு வைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் பவுன்ராஜ் வீட்டில் வைத்து கையொப்பம் வாங்கினார்கள். இவ்வழக்கில் என்னை சாட்சியாக சேர்த்தது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 56/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-3 | Village: | |
| Name | : ஜானகி | Age | : 48 |
| Father's/Husband's Name | :பவுன்ராஜ் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 04/08/2023**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய காவலர் திருமதி.கவிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**<u>சாட்சி மனுவின் பேரில் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1. அ.சா.1 எனது மகள் ஆவார். நானும் எனது கணவரும் காளவாயில் கல்அறுக்கும் வேலை செய்து வருகிறோம். கல்அறுக்கும் வேலைக்கு எனது மகளை அழைத்து செல்வேனா என்றால் இல்லை. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.எனது மகளுக்கும் ஆஜர் எதிரி ரகுபதிக்கும் எத்தனை வருடங்களாக பழக்கம் இருந்தது என்றால் 1 வருடமாக பழக்கம் இருந்து வந்துள்ளது. அவர்கள் இருவரும் பழகி வந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இது சம்மந்தமாக ஊரில் பேச்சுவார்த்தை எதுவும் நடந்ததா என்றால் ஊரில் உள்ளவர்கள் ஆஜர் எதிரி ரகுபதியை கேட்டார்கள். அவர் எனது மகளை கல்யாணம் செய்து கொள்ள முடியாது என்று கூறிவிட்டார்.

2. புகார் எப்போது அளிக்கப்பட்டது என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. ஆஜர் எதிரிகள் மீது என்ன புகார் அளித்தோம் என்றால் எதிரி ரகுபதி என் பெண்ணை கெடுத்துவிட்டு

கல்யாணம் செய்ய மறுத்துவிட்டதாக புகார் அளித்தோம். எனது மகள் அவரது விருப்பத்துடன் தான் ரகுபதியுடன் பழகி வந்தார் என்றால் சரியல்ல. பக்கத்து வீட்டில் வசித்து வரும் ஆஜர் எதிரிகள் வசதி வாய்ப்பாக இருப்பதால் அவர்களிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக அ.சா.1 ன் மூலமாக பொய்யாக புகார் அளித்து அதற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 56/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW- 2 | Village: | |
| Name | : பவுன்ராஜ் | Age | : 50 |
| Father's/Husband's Name | :தங்கையன் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 04/08/2023**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய காவலர் திருமதி.கவிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**<u>சாட்சி மனுவின் பேரில் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நானும் எனது மனைவியும் காளவாயில் கல்அறுக்கும் வேலை செய்து வருகிறோம். எனக்கு 4 குழந்தைகள். கல்அறுக்கும் வேலைக்கு எனது மகளை அழைத்து செல்வேனா என்றால் எப்போதாவது ஒருநாளைக்கு எங்களுக்கு சாப்பாடு எடுத்து வருவார். எனது மகளுக்கும் ஆஜர் எதிரி ரகுபதிக்கும் எத்தனை வருடங்களாக பழக்கம் இருந்தது என்றால் 1 வருடமாக பழக்கம் இருந்து வந்துள்ளது. ரகுபதி மீது புகார் யார் அளித்தது என்றால் என் பெண்ணை அழைத்து கொண்டு நாங்கள் தான் புகார் கொடுத்தோம்.

2. எப்போது புகார் அளிக்கப்பட்டது என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. பக்கத்து வீட்டில் வசித்து வரும் ஆஜர் எதிரிகள் வசதி வாய்ப்பாக இருப்பதால் அவர்களிடமிருந்து சொத்தை

அபகரிக்க வேண்டும் என்பதற்காக அ.சா.1ன் மூலமாக பொய்யாக புகார் அளித்து அதற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 56/2020 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-1 | Village: | |
| Name | : சசிகலா | Age | :20 |
| Father's/Husband's Name | : பவுன்ராஜ் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 04/08/2023**

சாட்சியை கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலைய காவலர் திருமதி.கவிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**<u>சாட்சி மனுவின் பேரில் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1. நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆஜர் எதிரி ரகுபதியை எனக்கு எவ்வாறுதெரியும் என்றால் அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். 1 வருடமாக எனக்கு பழக்கம். எனது பெற்றோர்கள் என்ன வேலை செய்து வருகிறார்கள் என்றால் காலவாய் வேலை செய்து வருகிறார்கள். நான் வேலை எதுவும் செய்யவில்லை. நானும் ரகுபதியும் 1 வருடமாக காதலித்து வந்தோம். ரகுபதி மீது எதற்காக புகார் அளித்தேன் என்றால் நானும் ரகுபதியும் பழகி வந்ததில் நான் கர்ப்பமாகிவிட்டேன். ரகுபதி என்னை கல்யாணம் செய்து கொள்வதாக கூறிவிட்டு கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன் என்று கூறி கர்ப்பத்தை கலைத்துவிடு என்று கூறியதால் புகார் அளித்தேன்.

2. எனக்கும் ரகுபதிக்கும் பழக்கம் ஏற்பட்டது எனது பெற்றோர்களுக்கு தெரியுமா என்றால் நான் சொல்லி தெரியும். வழக்கு சம்பவம் பற்றி ஊரில் பேச்சுவார்த்தை எதுவும்

நடைபெற்றதா என்றால் நடைபெறவில்லை. எந்த காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். யார் கூறி நான் புகார் அளித்தேன் என்றால் நானாகத்தான் புகார் அளித்தேன். எனது உடன்பாட்டுடன் தான் நானும் ரகுபதியும் காதலித்து வந்தோம் என்றால் சரிதான். 1ம் எதிரியிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் எனது பெற்றோர்களின் தூண்டுதலின்பேரில் எதிரிகளின் மீது பொய்யாக புகார் அளித்து அதற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் மனுவில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். புகார் மனுவில் உள்ள கையொப்பம் யாருடையது என்றால் என்னுடையது தான்.

**மறுவிசாரணை** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**